SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA
CENTRE FOR EXTERNAL DEGREES AND PROFESSIONAL LEARNING

# THIRD YEAR EXAMINATIONS IN ARTS (EXTERNAL) – 2010/2011
HELD IN NOVEMBER / DECEMBER-2013

## ECS 3.15 - ECONOMIC DEVELOPMENT - I

நேரம்: 3 மணி

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்குக

---

01. அ) ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில் ஒரு நாடு எந்தளவு சமூக, பொருளாதார அபிவிருத்தி நிலையை அடைந்துள்ளது என்பதனை அறிந்து கொள்வதற்கு கேட்கப்படவேண்டிய சில முக்கிய கேள்விகளாக நீர் எவற்றைக் கருதுவீர்?. (10 புள்ளிகள்)

ஆ). இலங்கை போன்ற ஒரு குறைவிருத்தி நாட்டின் அபிவிருத்தி நிலைமையை விளங்கிக்கொள்வதற்கு தலா வருமானத்தின் முக்கியத்துவத்தை விளக்குக. (10 புள்ளிகள்)

02. அ) பொருளாதார அபிவிருத்தி தொடர்பான பல்வேறு எண்ணக்கருக்களை மிலேனியம் அபிவிருத்திக் குறிக்கோள்களுடன் ஒப்பிட்டு விளக்குக. (10 புள்ளிகள்)

ஆ) மிலேனியம் அபிவிருத்திக் குறிக்கோள்களை அடைவதில் இலங்கை அடைந்துள்ள முன்னேற்றங்களை விளக்குக. (10 புள்ளிகள்)

03. இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு ஓர் உபாயம் என்ற வகையில் ஆதர் லூயிஸ் அவர்களின் மாதிரி குறித்து கருத்துரைக்குக. (20 புள்ளிகள்)

04. ஹர்ஸ்மனின் (Hirschman) சமச்சீரற்ற வளர்ச்சிக் கோட்பாட்டை விளக்கி இலங்கை போன்ற குறைவிருத்தி நாடுகளுக்கு அதன்பயன்படு தன்மையினை விளக்குக. (20 புள்ளிகள்)

05. அ). "விடுபடு கட்டம்" என்பதன் கருத்தினை விளக்கி ஒரு நாடு அதனை அடைந்து கொள்வதற்குத் தேவையான முன்நிபந்தனைகளையும் விளக்குக. (10 புள்ளிகள்)

ஆ). ரொஸ்டோவின் இயக்கவியல் மாதிரி எவ்வகையில் குறைவிருத்தி நாடுகளுக்கு படிப்பினையாக அமையும் என்பதனை விளக்குக. (10 புள்ளிகள்)

06) அ) வறுமை தொடர்பாக பின்வருவனவற்றை விளக்குக.

1. பூரண வறுமை
2. சார்பு வறுமை
3. மொத்த வறுமைக்கோடு
4. உணவு வறுமைக்கோடு (12 புள்ளிகள்)

ஆ. ஒரு நாடு வறுமையைக் குறைக்க மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகளை பட்டியற்படுத்துக.

(08 புள்ளிகள்)

07) அ). பொருத்தமான வரைபடத்தின் துணையுடன் "முதலுக்கான கேள்வியின் நச்சு வட்டம்" எனும் எண்ணக்கருவை விளக்குக.

(10 புள்ளிகள்)

ஆ). மேற்படி நச்சு வட்டத்தை உடைத்தெறிவதற்கு சாத்தியமான வழிவகைகளைக் குறிப்பிடுவதோடு அதனோடு தொடர்புபட்ட வாதங்களையும் ஆராய்க.

(10 புள்ளிகள்)

08). . பின்வருவனவற்றிற்கு விளக்கக் குறிப்பெழுதுக.

(அ) பொருளாதார வளர்ச்சி வருமானச் சமமின்மையின் மீது ஏற்படுத்தும் தாக்கம் (06 புள்ளிகள்)

(ஆ) உலகமயமாக்கலின் தாக்கங்கள் (08 புள்ளிகள்)

(இ) ஒரு நாட்டில் பொருளாதார அபிவிருத்தியை தடைசெய்யும் காரணிகள்

(06 புள்ளிகள்)